**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
🔍 Peer-Reviewed 🌐 Open Access 🔗 Crossref 🔗 Google Scholar
🔗 SJIF Impact Factor3.5 (2024-) 🔗 Multidisciplinary
UGC Approved by Transparent Peer Review

# ‘கரிசல்’ நாவலில் இடம்பெறும் நாட்டார் வழக்காறுகள்

*A STUDY OF FOLKLORE IN THE NOVEL ‘KARISAL’*

**T. Shyni***

*Annai Velankanni College,Tholayavattam – 629 157.*

*Manonmaniam Sundaranar University,Tirunelveli, Tamil Nadu – 627 012., IN*

*தொடர்புக்கு: T. Shyni — shiny184shiny@gmil.com

**ORCID:** T. Shyni https://orcid.org/0009-0006-8987-6747

| பெறப்பட்டது | திருத்தப்பட்டது | ஏற்கப்பட்டது | வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 25 September 2026 | 26 September 2026 | 1 October 2026 | 2 October 2026 |
| கட்டுரை எண் MS26-HP6UJM | **DOI:** https://doi.org/10.63300/tm12052026.08 | தொகுதி / இதழ் தொகுதி 12, இதழ் 05 (October 2026) | P91-99 |

**சுருக்கம்**

‘கரிசல்’ நாவலில் இடம்பெறும் நாட்டார் வழக்காறுகளை மையமாகக் கொண்டு அமைகிறது. கரிசல் நில மக்களின் வாழ்வியல், பண்பாடு, நம்பிக்கைகள், கலை மற்றும் சமூக உறவுகளை வெளிப்படுத்தும் நாட்டார் வழக்காறுகள் இவ்வாய்வில் ஆராயப்படுகின்றன. நாட்டார் பாடல்கள், ஒப்பாரி, கதைப்பாடல்கள், பழமொழிகள், சடங்குகள், திருவிழாக்கள், இறைவழிபாடு, நாட்டார் மருத்துவம், கலைவடிவங்கள் மற்றும் வட்டாரச் சொல்வழக்குகள் ஆகியவை நாவலில் எவ்வாறு இடம்பெற்றுள்ளன என்பது எடுத்துரைக்கப்படுகிறது. இவ்வழக்காறுகள் கரிசல் மக்களின் பண்பாட்டு அடையாளத்தையும் வாழ்வியல் அனுபவங்களையும் வெளிப்படுத்துகின்றன. இதன் மூலம் ‘கரிசல்’ நாவல் நாட்டார் வாழ்வியலையும் பண்பாட்டையும் பதிவு செய்யும் முக்கியமான படைப்பாக விளங்குவது புலப்படுகிறது.

**திறவுச்சொற்கள்:** திறவுச்சொற்கள்: கரிசல்; நாட்டார் வழக்காறுகள்; நாட்டார் பண்பாடு; நாட்டார் கலை; வட்டாரச் சொல்வழக்கு.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

## முன்னுரை

மனித நாகரிகத்தின் தொட்டில் கிராமங்களே. ஒரு இனத்தின் சொல்லை அதன் பண்பாட்டின் வேர்களை எழுத்து வடிவங்களை விட அவர்களின் வாழ்க்கை முறைகள் மூலமாகவே முழுமையாக உணரமுடியும் இத்தகைய பின்னணியில் உருவானதே நாட்டார் வழக்காறுகள். எவ்வித ஏட்டுச் சுவடிகளின் உதவியும் இல்லாமல், செவிவழிச்செய்திகளாகவும், நடைமுறைச் சடங்குகளாகவும் தலைமுறை தலைமுறையாக கடத்தப்பட்டு வரும் அறிவுப் பெட்டகமாக நாட்டார் வழக்காற்றியல் விளங்குகிறது. இது தனிமனிதனையும் மனித சமுதாயத்தையும் ஆராய்வதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இவை சமூகத்தின் உயிர்நாடியாக மட்டுமல்லாமல் வாழ்வு அனுபவங்களின் யதார்த்தங்களையும் முரண்பாடுகளையும் சிந்தனைச் சிதறல்களாக வெளிக்கொணர்கின்றன. இத்தகைய வழக்காறுகள் கலை, இலக்கியம், பண்பாடு என்ற நிலையில் சமூகத்தின் மதிப்பினை உணர்த்தும் என்பதை இவ்வாய்வு எடுத்துரைக்கிறது.

**நாட்டார் வழக்காறுகளின் வரையறையும் பொருளும்:**

ஆங்கிலத்தின் 'Folklore' என்ற சொல் வில்லியம் ஜான் தாமஸ் என்பவரால் 1846-ம்ஆண்டு முதன் முதல் உருவாக்கப்பட்டது. தமிழில் இத்துறைக்கு 'நாட்டார் வழக்காற்றியல்' என்னும் சொல்லைப் பயன்படுத்தி முறையான ஆய்வுகளுக்கு அடித்தளமிட்டவர் பேராசிரியர் நா. வானமாமலை ஆவார். நாட்டுப்புற மக்களின் அறிவு, கலை, நம்பிக்கை, பழக்கவழக்கம் மற்றும் பொருளாதாரம் சார்ந்த வாழ்வியல் கூறுகள் யாவும் நாட்டார் வழக்காறுகள் என அழைக்கப்படுகின்றன. இது தனிமனிதனின் படைப்பு அன்று. மாறாக ஒட்டுமொத்த சமூகத்தின் கூட்டு மனவெளிப்பாடாகும்.

**நாட்டார் வழக்காற்றியல் - சொல்லாடலும் கோட்பாடும்:**

நாட்டார் வழக்காற்றியல் என்னும் துறை உலகளாவிய அளவில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் முறைப்படுத்தப்பட்டது. 1846-ம் ஆண்டு வில்லியம் ஜான் தாமஸ் என்ற ஆங்கிலேய ஆய்வாளர் 'Folk-lore' என்ற சொல்லை முதன்முதலில் அறிமுகப்படுத்தினார். தமிழில் 'Folk-lore' என்பதற்கு 'நாட்டார் வழக்காற்றியல்', 'நாட்டுப்புறவியல்', 'மக்கள் வழக்காற்றியல்' எனப் பல கலைச்சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. பேராசிரியர் க.கைலாசபதி, நா.வானமாமலை, அ.சிவசுப்பிரமணியன், தே.லூர்து, அ.கா.பெருமாள் போன்ற முதன்மைத் தமிழ் ஆய்வாளர்கள் தமிழ்நாட்டுப் பண்பாட்டுச் சூழியில் நாட்டார் வழக்காறுகளைப் பற்றிய அறிவியல் பூர்வமான ஆய்வுகளை முன்னெடுத்தல் நாட்டார் வழக்காறுகள் என்பது வெறும் பொழுதுபோக்கு அம்சங்கள் கொண்டதல்ல. அவை ஒரு சமூகத்தின் வரலாறு மானுடவியல், மற்றும் உளவியல் கூறுகளை உள்ளடக்கிய வரலாற்று சான்றுகள் ஆகும்.

**கரிசல் நாவலில் நாட்டார் வழக்காறுகளின்:**

நாட்டார் வழக்காறுகள் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டுள்ளன. அதில் கரிசல் நாவலில் நாட்டார் வழக்காறுகள் ஐந்து முக்கிய பிரிவுகளைக் கொண்டுள்ளது.

- இலக்கியம் சார்ந்த வழக்காறுகள்
- பண்பாடு சார்ந்த வழக்காறுகள்
- கலை சார்ந்த வழக்காறுகள்
- உடலியல் சார்ந்த வழக்காறுகள்

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

- வட்டார சொல் வழக்காறுகள்

இதன் அடிப்படையில் கரிசல் நாவலில் நாட்டார் வழக்காறுகள் பிரிக்கப்பட்டுள்ளன.

**இலக்கியம் சார்ந்த வழக்காறுகள்:**

நாட்டார் வழக்காற்றியலும், இலக்கியமும் நெருங்கிய தொடர்புடையன. "நாட்டார் வழக்காறுகளால் வாய்மொழி வழக்காறுகளே இலக்கியத்தின் தாய் என்று கூறலாம்.(தே. லூர்து - 64) வாய்மொழி பாடல்களே தர்க்க அடிப்படையிலும் கால அடிப்படையிலும் இலக்கியத்தின் முன்னோடிகள். மனிதன் கல்வியறிவு பெறுவதற்கு முன் வாய்மொழி பாடல்களை வழங்கியிருந்தன. இவை ஏட்டில் எழுதப்பட்ட நிலையிலும், எழுதப்படாத நிலையிலும் அமையும். அவையாவன நாட்டார் பாடல்கள், கதைப்பாடல், பழமொழி போன்ற வழக்காறுகளைக் குறிப்பிடலாம் .

**நாட்டார் பாடல்கள்:**

நாட்டார் பாடல்கள் பெரும்பாலும் காடு கழனிகளையும் வயல்களையும் தொழில் செய்யும் இடங்களையும் பிரதிபலிக்கின்றன.(நாட்டுப்புறவியல் ப.28) கரிசல் நாவலில் கரிசல் நாட்டு புஞ்சையில் களையெடுப்பு நேரத்தில் வீரம்மா அக்கா களையெடுக்கும் தவசிலிங்கத்தைப் பார்த்ததும் பாடுகிறாள். இதனை நூல்களில்

**“தேஞ்ச கொளு ஏரக் கொண்டு**

**காஞ்ச மண்ண கீற வந்து**

**தவியாத் தவிக்கிறாரு எங்க மாமா -மனசு**

**அவியா அவியிறாரு எங்க மாமா”** (ப.219)”என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது.

**ஒப்பாரிப்பாடல் :**

பழமையான வாய்மொழி வழக்காறுகளுள்ஒப்பாரியும் ஒன்று. இறந்தாரை நினைத்துஅவர்மேல் பாடப்படும் பாடலை ஒப்பாரி என்றுகூறுவர். 'ஒப்பு' 'புலம்பினம்' என்ற சொற்களாலும் (ப.111) குறிப்பிடுவர். இது பெண்களுக்குரிய வழக்காறு. உற்றாரும் உறவினரும் இறந்த வீட்டுக்குக் கேதம் கேட்டுச் செல்லும்போது பெண்கள் இறந்தவாரின் உறவினரைக் கட்டியழுது ஒப்பாரி வைப்பது தமிழ்நாட்டு மரபு. இதையே நாவலிலும் ரெங்கண்ணன் மனைவி சக்கம்மா தற்கொலை செய்து கொண்டாள். அதற்கு ஒப்பாரி வைத்து பெண்கள் பாடிவதை

"ஏமா பாவிக் கூட்டங்க - ஒன்ன இந்த
மண்ண உட்டு தொரத்திட்டுதோ
ஏ சண்டாளக் கூட்டங்க – ஒன்ன
சாகடிச்சிப் போட்டுட்டுதோ ஆ.. ஆ.. ஆ…"(ப.299)

என்ற பாடலின் மூலம் சமுதாயத்தின் அவலநிலையை அறிந்து கொள்ளலாம்.

**கதைப்பாடல்:**

நாட்டுப் புறக் கதைப் பாடல்களும் இராமாயணம், மகாபாரதம் தொடர்பானவை அம்மானை என்னும் பெயரில் புகழேந்திப் புலவரால் பாடப்பட்டவை என்ற கருத்து தமிழ் இலக்கியவரலாறு (ப.337) என்ற நூல் இடம் பெற்றுள்ளது. கதைப்பாட்டு என்ற இலக்கிய வகையினது மக்களது வாயில் வாழ்கிறது. இதனை இயற்றியவர் யாராயினும் இதைப் பாடுபவரது

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

உரிமையாகவே மாறிவிடுகிறது. இதனை ஆங்கிலத்தில் 'Ballad' என்பர். மனித பண்பின் உயர்ந்த அம்சங்களையும், நம்பிக்கைகளையும் உணர்த்துகின்றன. இதனை நாவலில் மாரியம்மன் கோயில் திருவிழாவில் இராமன் கதைப் பாடல்களைப் பாடி ஆடினார்கள் என்பதை(ப-121)"தன்ன தன்ன தான தன்னதான தான தந்தானா"என்ற மெட்டில் தொடங்கி இராமன் கதைப்பாடல்களைப் பாடும் வரிகள் தெளிவுபடுத்துகின்றன.

## பழமொழி:-

நுண்மையான அறிவின் வெளிப்பாடு பழமொழி. பழைய மொழியே பழமொழி;(நாட்டுப்புறவியல் ப.106) பழமையும் நன்மையும் இனிமையும் நிறைந்தவை பழமொழிகளைக் கொண்டு மக்களின் பண்பாட்டினையும் நற்குணத்தையும் அறியலாம். முதுமொழி, முதுசொல் என்று நாட்டுப்புற இயலில் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

"ஆட்டுகிடும் வாலு அளந்து தான்
வச்சிருக்கான் ஆண்டவன்" (53)

"திறந்த மண்ணில்லன்னா அந்தமறிநீரன் (47)"
அடுப்புல எரிய வேண்டிய தீ நம்ம
அடிவயித்தல எரியாதிர்க்கும்" (ப- 236)

"அளக்கு மிஞ்சி அன்னோன் நம்பியும்
ஒதவ மட்டான்னு" (ப- 233)

போன்ற பல பழமொழிகள் நாவலில் காணப்படுகின்றது.

**பண்பாடு சார்ந்த வழிகூறுகள்.**

பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவற்றையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து ஈட்டும் பிற திறமைகளையும் பழக்கங்களையும் அடக்கியதாகும். பல பண்பாடு சார்ந்த கூறுகள் நாவலில் இடம்பெற்றுள்ளன.(பண்பாட்டு மானிடவியல் 152)

**கல்வி :**

"கல்லாத குருடரைக் காணவும் ஆகாது கல்லாத குருடர் சொல் கேட்கக் கடனன்று, கல்லாத குருடர்க்குக் கல்லாதார் நல்லராம், கல்லாத குருடர்க் கருத்தறியாதே" என திருமூலர் திருமந்திரத்தின்மூலம் கல்வியின் சிறப்பினை குறிப்பிடுகிறார். பொதுவாக கல்வி புரட்சியே பண்பாட்டுப் புரட்சிக்கு வழிவகுத்திடுகின்றது. அத்தகைய கல்வியை கரிசல் தெளிவாக கூறுகிறது."ஐயா இன்னிக்கு மத்தியானம் கஞ்சி உண்டா (ப.23)"என்பதையே கதையில் மக்கள் கல்வி, காணாத காட்சிப் பொருளாகவும், அவர்களின் வறுமை நிவாரணமாக கஞ்சிக்கு வேண்டி குழந்தைகள் பள்ளிக்கூடத்திற்கு வரக்கூடிய சூழ்நிலையில் இருந்தனர் உன்பதையும் காட்டுகிறது. மேலும் ஊரில் படித்தவர் என்றால் பட்டாளத்துக்காரர். அவர் மகன் கொண்டப்பன், வீரையன் மற்றும் ஒருசிலர் தான் பெண்கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் மூக்காயிக்கு கல்வி கற்கும் ஆசையை"எனக்கு எழுத வாசிக்க கத்துக் குடுப்பியா" (ப-க் 281) என்று வீரையனிடம் மூக்காயி கேட்பதன் மூலம் அறியலாம். சமுதாயத்தில் அடிமட்டத்திலும், மேல் மட்டத்திலும் உள்ள

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

மக்களின் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை குறைவு ஆனால் கண்ணப்பனின் முயற்சியால் கல்வித்தரம் மேம்பட்டது என்பதை நாவல் சுட்டிக்காட்டுகிறது.

**ஒழுக்கம்**

ஒழுக்கமில்லா வாழ்வு இருண்ட வீட்டை போன்றது. நம் முன்னோர்கள் "ஆர்கலி உலகத்து மக்கட்கெல்லாம் ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கமுடைத்து" என்று முதுமொழிக்காஞ்சி இவ்வாறாக. கரிசல் நாவலால் முதலாளியின் மகன் இராமசாமி திருமணம் ஒழுக்கமீறல்களை

"அஞ்சி வயதுகாரனுக்கு இருபத்தஞ்சி
வயதுக்காரிய கட்டியப்பனுவ" (ப-28)

என்றும், சமூதாயத்தில் காணப்படும் ஒழுக்கத்தை வெள்ளச்சி, வீரம்மா என்ற கதாபாத்திரங்கள் மூலமாகவும், தந்தையானயன் மகள் என்ற உறவுமுறை தெரியாமல் ஒழுக்க நெறியிலிருந்து தவறி நடந்துக் கொள்ளும் சமுதாயத்தினையும் ஆசிரியர் சுட்டிக்காட்டுகிறார்.

**ஈகையும் விருந்தோம்பலும்:**

வறுமைபட்டவர்க்கு அவர் வேண்டும் பொருளைத் தருவதே ஈகை பொருளியலில் சமத்தவத்திற்காக சில முயற்சிகளைத் தமிழர்கள் மேற்கொண்டனர். அதுவே அவர்களால் பேசப்படும் ஈகை கோட்பாடு என்று பேராசிரியர் க.ப அறவாணன் குறிப்பிடுகின்றார்.

"வறியவற்கு ஒன்று ஈவதே ஈகைமற்றெல்லாம்
குறியெதிப்பை நீரதுடைத்து" (குறள்-221)என்கிறார்.

நாவலில் கண்ணப்பன்.நடுக்காட்டு வாத்தியார் சுப்பிரமணியத்துக்கும் தனது நண்பனான வீரையனுக்கும் மற்றும் சிலருக்கும் அவர்கள் வேண்டியன அளிக்கிறான். தமிழர்பண்பாட்டு கூறுகளில் ஒன்றாக கருதப்படுவதுவிருந்தோம்பல்.இதனை,

"உடமையுடன் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு"

என்ற குறள். ஈகையின் சிறப்பைக் காட்டுகிறது. கண்ணப்பரை முதலாளி சக்கரைச்சாமி குடும்பமும் பட்டாளத்துக்காரர், உத்தண்டு குடும்பமும் விருந்து அளித்து சமுதாயத்தில் ஒரு அங்கமாக்கிறது என்ற செய்தி விருந்தோம்பல் பண்பு நாவலில் இடம்பெற்றிருப்பதைக் காட்டுகிறது.

**தொழில்:**

மனிதர்கள் உயிரையும் உடம்பையும் பாதுகாத்து வாழ்வதற்கு துணை செய்வது தொழில். தொழில் என்பது மனிதன் தனது அறிவு, திறமை, உழைப்பு ஆகியவற்றைப் பயன்படுத்தி வருமானம் ஈட்டுவதற்கு சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் மேற்கொள்ளும் பணியாகும். தொழில்கள் மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளையும் பொருளாதார வளர்ச்சியையும் உறுதி செய்கின்றன. கரிசல் நாவலில் பல தொழில்களைப் பற்றிப் பேசப்பட்டுள்ளது. அதில் மருத்துவ தொழில் செய்யும் வீரசாமி நாயக்கர், நாவிதர் பணிபுரியும் ஆறுமுகம், கொல்லப்பணியும் பழனியாண்டி, ஓதுதல் பணியும் பூசாரி முனியசாமி, வாத்தியார் பணியும் கண்ணப்பன், கடை வைத்து பிழைக்கும் பேத்தியப்பன், தரகர் வேலைப்பார்க்கும் உத்தண்டு போன்றோர்களின் தொழிலை தவிர நாவலில் முக்கிய தொழிலாக உழவுத் தொழில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**சடங்குகள்:**

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

சமுதாய வாழ்வில் சடங்குகள் பெரும் பங்காற்றுகின்றன. சமய நிகழ்ச்சிகளின் போது மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சடங்கும் அதில் பங்கு பெறுவோர் அனைவரையும் ஒன்று பட வைக்கிறது. "ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் உள்ள அனைவரால் ஒன்றுபட்ட மனித்தின் வெளிப்பாடே அந்த சமூகத்தவரின் சமயம்"(நாட்டுப்புறவியல் ஆய்வு 525) என்பார். தர்க்கம் இது தனிமனிதனின் சுயமாக ஆக்கமாகவோ பண்பாட்டினுடைய தனிச்சிறப்பு கூறாகவே அமையும்.

நாவலில் திருவிழா, முன் காப்புக்கட்டுதல், நாளேரு கட்டுதல், விவசாய சங்க கட்டிட விழாவில் திருவிளக்கேற்றுதல், அடிக்கல் போடுதல், உயிர் தியாகம் செய்த வீரர்களுக்கு மரக்கன்று நடுதல் போன்ற சடங்குமுறைகள் இடம்பெறுகின்றன. மேலும்

"இது ஒரு பழைய வழக்கம், நாளேரு

தொடங்கு முன்ன ஏர்க்கொண்டு

ஆசாரிமுன்ன வச்சி பழுது பார்த்து தட்சணை

கொடுத்து கும்பிட்டு எடுத்துக்கிட்டு போணும்"(ப-421)என்று சுப்பையா கூறுவதிலிருந்து சமுதாயத்தில் சடங்குமுறை மக்களோடு ஒன்றிணைந்துள்ளது என்பதை உணர முடிகிறது.

**இறைவழிபாடு:**

இந்நாவலில் நாட்டார் தெய்வ வழிபாடு முறை இடம் பெறுகிறது பெருமாள்புரத்து மக்களின் சிறுதெய்வம் காளியம்மன். இந்த அம்மனுக்கு திருவிழாக் காலத்தில் சிறு தெய்வங்களுக்குரிய சடங்குகள் அனைத்தும் நடைபெறுகின்றன. புதுப்பானை தீயில் புதுக்கலயம் கட்டி இறக்கிய பூக்களில் நவதானியங்களின் மாலை கலந்து நெல்லையும் சேர்த்துபுளிக்க வைத்து மதுநிறைந்த புதுப்பானை எடுத்தல், தீ சட்டி எடுத்தல், திருக்கண் காத்தல், மொட்டையடித்தல், கிடாய் வெட்டுதல் போன்ற வழிபாட்டினை அம்மனுக்கு செய்து வழிபடுகின்றனர். இதனால் தெய்வம் வளமை கொடுக்கும் என்றும், கொடிய நோய்களிருந்தும் நம்மை காக்கும் என்ற நம்பிக்கையில் இறை வழிபாட்டை செய்கின்றனர்

**திருவிழாக்கள்**

"விழா எனினும் திறந்த வாசல் வழியே தான் நம் நாட்டு மக்களை அறிந்து கொள்ள முடியும்" என்பர் தாகூர். (நாட்டுப்புற இயல் பக்235) மனித சமுதாயம் பல்வேறு காரணங்களினால் பல்வேறு பிரிவுகளாக வாழ்ந்திருந்த போதிலும் அச்சமுதாயம் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்களாகும். சமுதாய மாற்றத்தால் புதிய திருவிழாக்கள் தோன்றுகின்றன. இவை பண்பாட்டு உறவை வளர்க்கவும், ஒருமைப்பாட்டுணர்வை வளர்க்கவும் பயன்படுகின்றன. இதன் மூலம் பண்பாட்டு பழக்கவழக்கங்களும் வரலாறுகளும் வெளிப்படுகின்றன. காளியம்மன் கோவில் திருவிழா, பொங்கல் திருவிழா, எருதுகட்டு விழா, போன்றத் திருவிழாக்கள் நாவலில் இடம்பெறுவதை அறிய முடிகிறது."பொங்கலோ பொங்கல் பொங்கலோ பொங்கல் (ப.362)என்றத் தொடர்களின் மூலம்"பறம்பு தரையில் தான் எருது கட்டு நடக்கும் (364)என்று கூறுவதன் மூலம் இந்நாவலில் திருவிழாக்கள் பற்றி அறியமுடிகிறது.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

**நம்பிக்கைகள்:**

நம்பிக்கைகள் மனிதனால் உருவாக்கப்படும். அந்நம்பிக்கைகளால் சமுதாயத்தில் பாதுகாக்கப்படுகின்றன. "மனித வாழ்வில் ஏற்படும் சில நிகழ்ச்சிகளுக்குக் காரணம் கற்பிக்க இயலாத பொழுது மனித மனமானது சிலவற்றைப் படைத்துக் காரணம் கற்பித்துக் கொள்கிறது. அவைகளே நம்பிக்கைகளாக உருவாகின்றன." என்கிறார் சு. சக்திவேல் (ப. 90) இந்த மனிதனின் தன்னைப் பேணும் சமுதாய உணர்வுமே நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. இந்த நம்பிக்கைகளில் 'அதிகாலைக் கனவு பலிக்கும் என்று நம்புகின்றனர்' இதனை பொன்னு அதிகாலை வேளையில் கண்ணப்பனை சந்திப்பது போலவும் உறவாடுதல் போலவும் கனவு காண்கிறாள், அதுபோல அந்த வேளை பலித்து விட்டது. மக்களிடையே காலம் பற்றி நம்பிக்கையில்,

"நேரம் ஆகுதில்ல - - எட்டரைமணிக்கு
மேல ராகுகாலம்" (ப-413).

என்று சென்னப்பன் கூறுவதிலிருந்து காலம் பற்றி நம்பிக்கையும் உள்ளது என்பதை அறிய முடிகிறது.

**மருத்துவம்:**

ஒவ்வொரு மனித சமுதாயமும் தனக்கென ஒரு மருத்துவ அமைப்பு முறையைக் கொண்டுள்ளது. அதனைச் சமூக நிறுவனம் என்றே கூறலாம். "நோயும் மருத்துவமும் மனித இனப் பண்பாட்டு வரலாற்றில் பார்க்கமுடியாத ஒன்று ஆகும்" (நாட்டுப்புறவியல் ப.166). நாட்டார் மக்கள் கையாளும் மருத்துவ முறைகளை நாட்டார் மருத்துவம் என்பர். இது பல்வேறு படிநிலைகளைத் தாண்டி வந்த போதிலும் தனது பெருமையை இழக்காமல் இன்றளவும் நிலைத்து நிற்கிறது. இதைப்பற்றி நாவலில் கண்ணப்பனிடம்,

"பெரியப்பா ஒரு எண்ண குடுத்தாரு அதப்போட்டுத்
தடவி ஒத்தடம் குடுத்த பெறகு கொஞ்சம் தாவில" (ப.172)என்று வீரையன் தாய் கூறுகிறார்.

கருப்பட்டி காப்பியும், கசாயம் (மருந்து) வேப்பெண்ணெய், மண்ணெண்ணெய் போன்ற மருத்துவ குறிப்புகளும் காணப்படுகின்றன.

**கலை சார்ந்த வடிவங்கள்:**

"மனிதனுக்கு இயல்பாகத் தோன்றுகின்ற உணர்வு கலை உணர்வு. இயல்பாகத் தோன்றி இயற்கையோடு இயைந்து உணர்ச்சிகளை உறைவிடமாய் மக்களைக் களிப்டையச் செய்யும் கலைகளை நாட்டுப்புறக் கலைகள்" (நாட்டுப்புறவியல் ஆய்வு ப.136)ஆகும் என்கிறார். கலை நிகழ்த்தும் கலை, நிகழ்த்தா கலை என்று இருவகைப்படும். கலைகளின் வளர்ச்சிக்கு காரணமாக திருவிழாக்கள் அமைகின்றன. கலை உணர்வுகள் நாவலில் அதிகம் இடம் பெறுகின்றன.

குறிப்பாக காளியம்மன் கோவில் திருவிழாவில், ஒயிலாட்டம், மேளம், நாதஸ்வரம், பம்பை நாடகம் போன்ற கலைகள் அரங்கேற்றப்பட்டதையும் எருதுக்கட்டு விழாவில் கலைகள் இடம்பெற்றதையும்

"கோயிலின் முன்னே ஒயிலாட்டம்
நடந்து கொண்டிருந்தது" (பக்.121)

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

"நையாண்டி மேளம் சத்தம் செவியைத் துளைத்தது" (பக்.127)என்ற நிகழ்ச்சிகளின் மூலம் கலைகள் நாவலில் வாழ்க்கையே இணைந்து இருந்தது என்பதை உணரலாம்.

### உளவியல் சார்ந்த வழிகாட்டுதல்:

உளவியல் மனித உள்ளம், நடத்தை, பற்றிய தன்மையை எடுத்துரைக்கிறது. "மனித உள்ளத்தின் உணர்வே எல்லா அறிவியல்களுக்கும் கலைகளுக்கும் கருவறையாக விளங்குகிறது என்கிறார். தி.சு. நடராசன் (ப. 88) இதனை மாந்தரின் உள்ளம் பற்றிய துறையே உளவியல் எனலாம்.

இத்தகைய உளவியல் சாதாரண மனிதனின் மனவாழ்க்கையைப் பற்றி ஆய்வது - துன்ப இன்ப உணர்வுகளும், குழந்தை மனம் சார்ந்த உளவியல் இயல்பு உளவியல் எனப்படுகிறது. "முதலாளி ஆட்டுக்கு ஊட்டும் கஞ்சியையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றன" (ப-44) என்ற வரிகள் குழந்தைகளின் மனநிலையைச் சுட்டுகிறது.

**வட்டார சொல் வழக்காறுகள்:**

வட்டார என்பது பேச்சுநடை, இலக்கண இலக்கிய செம்மையின்றிக் காணப்படும். மக்கள் மனதில் தோன்றுவதை அப்படியே உச்சரிப்பது வட்டார வழக்காறுகள் எனலாம். இதில் நேரடியாக, மறைமுகமாக பொருளைத் தரக்கூடிய வார்த்தைகளும் கலந்திருக்கும். தீய சொற்களும், மண்வாசனைக்கு ஏற்ப அவர்களின் பேச்சு வழக்குகளும் அமைகின்றன. கரிசல் நாவலில் அதிக அளவில் வட்டார பேச்சுவழக்கு காணப்படுகின்றது.

"ஈரமண்ண வாரிப்போடு அந்த
ஒறவு மொறையில" (ப-60)
"நோவுக்குஞ் சாவுக்கு பயந்தா
புருசனோட படுத்திருக்கப்படாது" (ப-288)
"நல்ல பாம்பு மடியில கட்டிக்கிட்டாப்ல" (ப-33)
என்பன போன்ற வட்டார வழக்குச் சொற்கள் அதிகம் காணமுடிகிறது.

### முடிவுரை

கரிசல்' நாவலில் நாட்டார் வழக்காறுகள் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. அவை கரிசல் மக்களின் வாழ்வியலை இயல்பாக வெளிப்படுத்துகின்றன. நாட்டார் பாடல்கள், ஒப்பாரி, கதைப்பாடல்கள், பழமொழிகள் இடம்பெற்றுள்ளன. சடங்குகள், திருவிழாக்கள், வழிபாடுகள் மக்களின் பண்பாட்டை எடுத்துரைக்கின்றன. நம்பிக்கைகள் மற்றும் நாட்டார் மருத்துவம் அவர்களின் வாழ்வியல் அனுபவங்களைப் பிரதிபலிக்கின்றன. ஒயிலாட்டம், மேளம், நாதஸ்வரம் போன்ற கலைகளும் இடம்பெற்றுள்ளன. வட்டாரச் சொல்வழக்குகள் நாவலுக்கு இயல்பான மண்வாசனையை வழங்குகின்றன. இவை மக்களின் சமூக உறவுகளையும் உணர்வுகளையும் வெளிப்படுத்துகின்றன. இதன்மூலம் கரிசல் மக்களின் பண்பாட்டு அடையாளங்கள் தெளிவாகப் பதிவாகியுள்ளன. எனவே, 'கரிசல்' நாவல் நாட்டார் வாழ்வியலின் பண்பாட்டுக் களஞ்சியமாகத் திகழ்கிறது.

Vol. 12, No. 05 (October 2026), pp. 1–10
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

## துணைநூற்பட்டியல்

1.ஜெகத்குமார், த. நாட்டுப்புற இயல்,5-ஆம் பதிப்பு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 2023.

2.குடந்தையான், இரா. தமிழர் பண்பாடு அன்றும் இன்றும் சென்னை, 1956.

3.நடராசந்தி, சு. திறனாய்வுக் கலை: கொள்கைகளும் அணுகுமுறைகளும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 2021.

4.காமராசு, இரா. பலவழிப் படு சங்க இலக்கியக் கட்டுரைகள்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 2014.

5.சக்திவேல், சு. நாட்டுப்புற இயல் ஆய்வு. மணிவாசகர் பதிப்பகம்.

6.பக்தவத்சல பாரதி. பண்பாட்டு மானிடவியல். 4-ஆம் பதிப்பு, திருவாளுவர் பதிப்பகம், பூந்தமல்லி, 2009.

7.தேவநேயப் பாவாணர், ஞா. பண்டைத் தமிழ் நாகரிகமும் பண்பாடும், நிதம் வெளியீடு, 2022.

8.சேதுரைமுத்து, புலவர். திருக்குறள் தெளிவுரை உரை, கங்கை புத்தக நிலையம், சென்னை, 2003.

9.ஸ்டான்லி பாய், இ. நாட்டுப்புற வழக்காறுகள் (குமரி மாவட்டம்) 1-ஆம் பதிப்பு, தமிழாய்வு மையம், ஸ்காட் கிறிஸ்டவக் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில், 2009.

10.ஸ்டீபன், ஞா. இலக்கிய இனவரைவியல்,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, 2017.

11.கணேசன், சி. தாணங்களும் நடனங்களும்,அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி, 2007.

12.லூர்து, தே. நாட்டுப்பற வழக்காற்றியலில் சில அடிப்படைகள், 1-ஆம் பதிப்பு, வழக்காற்றியல் ஆய்வு மையம், தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி), பாளையங்கோட்டை, 1997.

13.திருமூலநாயனார். திருமந்திரம் மூவாயிரம்,தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 1942.

© 2026 T. Shyni. https://creativecommons.org/licenses/by/4.0 வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..